



# அமரர்
# திருமதி. கலாநிதி வரதகுமார்
## அவர்களின்
## 31ம் நாள் நினைவு மலர்
## 30.05.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

ஒளிக்கு என்றுமே

இயற்கையிலும்

செயற்கையிலும்

ஒரு

தனி மதிப்பு

ஒளி என்னும் பொழுது

ஆழமான

பல கருத்துக்கள்

அத்தகைய ஒளியாய்

திகழ்ந்த எங்கள்

குடும்பத் தலைவிக்கு

இம் மலர்.

– குடும்பத்தினர் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அமரர்
# திருமதி கலாநிதி வரதகுமார்

மலர்வு
10.03.1953

உதிர்வு
30.04.2014

## திதிவெண்பா

"நற்குணமும் நலமான இறையருளும் துலங்கிட
வற்றாத நல்லுணர்வு முற்றானபற்று – முதிர்வான
அன்புடைய கலாநிதி வரதகுமார் சென்றார் ஜெய
இன்பவருட சித்திரை பூர்வ பட்ச துதியை திதிதனிலே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பஞ்சபுராணம்

## தேவாரம்

பண் - பழம்பஞ்சுரம் இராகம் - சங்கராபரணம்

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாதமே மனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன் இனிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்றவர் தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்றவா உனை நான் மறக்கினுஞ்
சொல்லும் நா நமச்சி வாயவே

## திருவாசகம்

பண் - முல்லை இராகம் - மோகனம்

அன்றே எந்தன் ஆவியும் உடலும் உடமெயெல்லாமுங்
குன்றே அனையாய் எனையாட் கொண்டபோது கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டா எண்டோள் முக்கண் எம்மானை
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிசைப்பா

பண் - சாளரபாணி இராகம் - ஆனந்தபைரவி

கனகமணி மாடஞ் சூளிகைசூழ் மாளிகைமேல்
அளகமதி நுதலார் ஆயிழையார் போற்றிசைப்ப
ஒளிகொண்ட மாமணிகள் ஓங்கிருளை யாங்ககற்றத்
தெளிகொண்ட தில்லைச் சிற்றம்பலமே சேர்ந்தனையே

# திருப்பல்லாண்டு

பண் - பஞ்சமம் இராகம் - ஆஹிரி

சீருந்திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும்பெறாத அறிவுபெற்றேன் பெற்றதார் பெறுவா ருலகில்
ஊருமுலகுங் கழறவுழறி உமைமண வாளனுக் காளாய்ப்
பாரும் விசும்பும் அறியும்பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே

# திருப்புராணம்

பண் - செந்துருத்தி இராகம் - மத்தியமாவதி

தெண்ணிலா மலர்ந்த வேணியர் உன்தன்
திருநடங் கும்பிடப் பெற்றிந்த
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரிய
கைமலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினங் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

இராகம் - ஆரபி                    தாளம் - ஆதி

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திதிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே

# வாழ்த்து

இராகம் - மத்தியமாவதி

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்ம சாந்திப் பிரார்த்தனை

திருகோணமலையில் கோணேஸ்வரப் பெருமான் குடிகொண்ட புனித பூமியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர். திருமதி கலாநிதி - வரதகுமார் ஆசிரியர் அவர்களின் 30.04.2014ந் திகதி இயற்கை எய்திய செய்திகேட்டு குடும்ப உறவினர் ஒருவரை இழந்தது போன்ற உணர்வு ஏற்பட்டமையை மனந்திறந்து வெளிப்படுத்தாமல் இருக்கமுடியாது. ஏனெனில் அன்னாரிடம் நான் கண்ட மனித நேயம் பிறரை மதிக்கும் பண்பு, உபசரிக்கும் பக்குவம் இது எனது குடும்பத்தினரது மனதிலும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.

அன்னார் சிறந்த மனையியல் பாடத்துறை ஆசிரியர். எமது பிரதேசத்திலும் பிற மாவட்டத்திலும் இத்துறை சார்ந்த சேவையை முழுமனதுடன் வழங்கிருந்தமையை நான் கண்டிருக்கின்றேன். வவுனியாய் பிரதேசப் பாடசாலை மாணவர்களுக்கான செய்முறைப் பரீட்சை மதிப்பீட்டாளராக கடமையாற்றியமை எனது ஞாபகத்திற்கு வருகிறது. கடமையுணர்வும் மாணவர்கள்மீது நீங்காத பற்றும் கொண்டவர். தன்னுடன் இணைந்து கடமையாற்றும் ஆசிரியர்களுடன் மிகுந்த பற்றுக்கொண்டவர். ஒரு பண்பாளர். ஆன்மீகத் துறையிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியது மட்டுமல்ல தனது குடும்பத்தினர்மீதும் அன்பும் பாசமும் காட்டுகின்ற சிறந்த குடும்பத்தலைவியாக இறுதி மூச்சுவரை வாழ்ந்துள்ளார். அன்னாரது இழப்பில் துயருறுகின்ற அவரது குடும்ப உறவினர்களுக்கு ஆறுதல் கூறுவதுடன் அன்னாரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

ந. விஜேந்திரன்
வலயக்கல்விப் பணிப்பாளர்
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற் பா

01. அன்பு பொறுமை சாந்தம் தன்னல
மின்மை இவையாவும் இலங்கும் இனியவளே!
என்பும் பிறர்க்கென வாழ்ந்த பெருமகளே!
புன்னகை மேவிடும் சுகுண வதனியே!

02. முன்னம் ஸ்ரீசண்முகாவில் முதலாம் ஆண்டுமுதற்
கன்னல் தமிழில் கல்விகற்ற மாணவியே!
மண்ணும் மனைவிளங்க மனையியல் கற்றுப்
பின்னர் நல்லாசிரியையென நற்சேவை செய்தாயே!

03. இன்புடன் இனியவரைக் கைப்பிடித்து இல்லறத்தில்
நன்மகனைப் பெற்று நலம்பெற வளர்த்து
இன்னும் அவனுயர உழைத்த உத்தமியே!
கன்று கதறியழக் கனதூரம் சென்றதுமேன்?

04. சென்னியுங் கொள்ளாத சிந்தனைகள் கொண்டதேன்
பென்னம் பெரியசுமை பேதையுயிர் குடித்ததுவோ?
என்ன அவசரத்தில் இவ்வுலகை நீ துறந்தாய்?
மின்னலென ஓடிநீயும் மறைந்ததேன் கலாநிதி!

05. என்னசொல்லித் தேற்றுவது, எப்படித்தான் ஆறுவது
வன்னவடி வேலனருள் வந்ததுமே காக்கக்கூடும்
உன்னுயிர் சாந்திபெற உத்தமனை வேண்டுகிறோம்
என்றுமே நீவாழ்வாய் இனியவர் நெஞ்சினிலே.

ஆழ்ந்த துயரில்
செல்வி. மணிமேகலாதேவி, கார்த்திகேசு
முன்னாள் ஆசிரியை

24A, தேவாநகர், பிரதான வீதி
திருகோணமலை
2014.05.16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணை வடிவான கலா காற்றினிலே கரைந்தனையே.....

திருகோணமலையில் முருகேசு பரமேஸ்வரி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியாய்ப் பிறந்து வளர்ந்து கலை பல கற்று நற்குணவாளனாம் வரதகுமாரைக் கைப்பிடித்து சீரும் சிறப்புமாய் குலப்பெருமை சிறக்க வாழ்ந்த கருணை வடிவான கலாவே நீவிர் காற்றினில் கரைந்தனையோ!

நற்புத்திரியாய், நன் மாணவியாய், நல்லாசிரியையாய், நல்ல உப அதிபராய் பண்பிலே தெய்வமாய், பார்வையில் சேவகியாய், உற்ற தோழியாய், பாசமிகு சகோதரியாய் எல்லோரையும் அணைத்து ஆறுதல் படுத்தும் அன்னையாய் பரிவோடு வாழ்ந்து வந்த உங்களைக் கவர காலன் எண்ணம் கொண்டு காவோலை அஞ்சல் இட்டானோ? முகவரி சரிதான் என்று உமது இதயமும் துடிப்பை நிறுத்தியதோ?

வலியற்ற மரணத்தைத் தழுவிய உங்களுக்கு..... கடந்த வருடம் கடல் கடந்து வந்து உங்களோடு அதிக நாள் தங்கிய உங்களுடைய அன்பிலே தன்னை மறந்து மகிழ்ந்திருந்த அன்னையின் வலி தெரியவில்லையா? கண்ணுக்கு கண்ணாய் எனக்கு அக்கா இருக்கிறா என்ற திடமான நம்பிக்கையோடு இருந்த தங்கை பாமதியின் கதறல் உங்களுக்கு கேட்கவில்லையா? பெரியம்மா என்று பாசத்துடனும் நேசத்துடனும் அன்பைச் சொரியும் குழந்தைகள் உங்கள் நினைவுக்கு வரவில்லையா?

ரஷ்யாவில் பொறியியல் பீடத்தில் இறுதியாண்டு கற்றுக்கொண்டிருக்கும் உங்கள் மகன் குருபிரகாஷ் பூவொன்று இதழ் இதழாகப் பிரிந்து சிதறி விழுவது போல் உங்களைப் பார்க்கவும் முடியாமல் பிரிவைத் தாங்கவும் முடியாமல் அவன்படும் வேதனையை நீங்கள் உணரவில்லையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகருக்குப் பூமாலை கட்டிக் கணவரிடம் கொடுத்து விட்ட நீங்கள் அவர் கோவிலால் திரும்பி வரும்போது நினைவிழந்து விட்டீர்களே. உங்களைப் பார்த்து அவர் துடித்த துடிப்பையும் நெஞ்சம் பதைபதைத்து செய்வதறியாது நின்ற நிலையையும் நீங்கள் அறியவில்லையா? விநாயகர் உங்களைத் தன்வழியே வருவதற்கு அச்சாரம் இட்டு விட்டாரே.

உங்களிடம் பயிலும் குழந்தைகட்கும் பாடசாலை சமூகத்திற்கும் தாங்கள் ஆற்றிய பணி அளப்பரியது. எவர் எது கேட்டாலும் இல்லை என்னாது உதவுகின்ற உங்கள் பண்பும், அதிராமல் அழகாக அமைதியாகப் பேசுகின்ற பாங்கும் எம்மில் எத்தனை பேர்க்குண்டு.

குணமென்னும் குன்றேறி நின்றவளே உமது இழப்பு தாங்க முடியாத ஒரு பேரிழப்பு. தன்னை எரித்து ஒளிதரும் மெழுகுவர்த்திபோல் எல்லோர்க்கும் ஒளி தந்தாய்.

உன் குடும்பத்தினர் அனைவரிடத்திலும் அளவிட முடியாத பரிவும் பாசமும் வைத்திருந்தாய் எப்படி எல்லோரையும் விட்டுப்போக எண்ணம் கொண்டாய். இல்லை இல்லை உன்னிடம் அப்படி ஒரு எண்ணம் இருக்கவில்லை. உன் முடிவு உன்னை அறியாமல் ஏற்பட்டதொன்று.

காலம்வரும்போது காவோலை விழுவதுபோல் கண்ணை விட்டு நீ மறைந்து விட்டாய். கருணை நிறைந்த கலாவே காற்றினில் நீ கரைந்து விட்டாய்.

ஆனால் தென்னை தன்னில் ஓலை இட்ட பதிவுபோல் என்றும் எம் நெஞ்சில் நீ நிலைத்திருப்பாய். உன் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கும்

திருமதி. தேவிகாராணி முருகுப்பிள்ளை
(ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்)
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி கலாநிதி வரதகுமார் அவர்களின் வாழ்க்கை வரலாறு

ஈழத்திருநாட்டின் கிழக்கே திருக்கோணேஸ்வரர் அமைந்துள்ள புண்ணிய பூமியாம் திருகோணமலை வாழ் சைவ வேளாள குடும்பத்தில் தோன்றிய அமரர் கணபதிப்பிள்ளை முருகேசு பரமேஸ்வரி முருகேசு இவர்களின் சிரேஷ்ட புதல்வி. அமரர் கலாநிதி வரதகுமார் திருகோணமலை மாநகரின் 460, திருஞானசம்பந்தர் வீதியை பிறப்பிடமாக கொண்ட முருகேசு பரமேஸ்வரி தம்பதிகளின் புத்திரியாக 1953.03.10ம் நாள் பிறந்தார்.

தாய் தந்தையருடன் வசித்துவரும் வேளையில் இவர் ஆரம்பக் கல்வியை ஸ்ரீ சண்முகா வித்தியாலயத்திலும் உயர்தரக் கல்வியை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியிலும் கற்றார். பின்பு ஆத்திமோட்டை மகாவித்தியாலயத்தில் முதல் ஆசிரியராக நியமனம் பெற்று கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ஆசிரியர் பயிற்சி முடித்து கந்தளாய் பரமேஸ்வரா மகாவித்தியாலயத்தில் கடமையாற்றி 31 வருடங்கள் ஆசிரியராகவும் பின்பு பிரதி அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தனது வாழ்க்கை துணையாக திருகோணமலையை பிறப்பிடமாகக்கொண்ட ஞானசம்பந்தர் (நீர்ப்பாசன இலாகா) இராஜம்பாள் என்பவர்களின் மகனான வரதகுமார் என்பவரை துணைவராகக் கொண்டு வாழ்க்கையை ஆரம்பித்து ஆசிரியர் தொழிலை சிறப்பாக செய்து குழந்தை செல்வத்தை பெற்று எடுத்து சிறப்பாக வாழ்ந்து வந்தார். இவ்வாறு வாழ்ந்து வரும் காலங்களில் மானிடப் பிறவியின் பயனைப் பெறும் நோக்கமாக தங்கள் குலதெய்வமாக மடத்தடி மாரியம்மன், சிவன் கோவில், உவர்மலை வழிவிடு பிள்ளையார், உவர்மலை ஆஞ்சநேயர் ஆலயங்களில் இறைபணி செய்து வந்தார்.

இவ்வாறு வாழ்வினைக் கொண்டு செல்லும்வேளையில் 30.04.2014 இயற்கை மரணம் எய்தினார்.

பிறர்மனம் நோகாது பிறர்குறை பேசாது வாழ்ந்த அந்த ஜீவனை பிரிந்து குடும்பத்தாரும் அவருடன் பழகிய அனைத்து உள்ளங்களும் கண்ணீரில் துயருறும் இவ்வேளையில் மீளாத்துயில் கொண்டு சிவபதம் அடைந்த அந்த ஜீவனின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

~ குடும்பத்தார். ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணவர் இரங்கல்

கைப்பிடித்த நாள் முதலாய் கண் விழியாய்
நீ இருந்தாய் கண்மணியே
காலன் உனை அழைத்ததனால்
கலங்கி நான் நிற்கின்றேன்
களைப்பின்றி உழைத்திடுவாய்
கடமைகளை சரியாய் செய்திடுவாய்
அன்பாலே அரவணைத்தாய்
அனைவரையும் பாசத்தால் பிணைத்திருந்தாய்
பண்போடு பழகிடுவாய்
பாதியிலே சென்றதனால்
பதறி நான் நிற்கின்றேன்
நோய் என்று சொன்னதில்லை
நோய் வாய் பட்டதில்லை
நோய் என்று அறிந்திருந்தால் - அம்மா
உனை காத்திருப்பேன் அன்று
கூட ஆலயத்திற்காய் பூமாலை
கட்டி வைத்தாய் வாசலிலே
கோலமிட்டு கொழு விளக்கும்
ஏற்றி வைத்தாய்
கோவிலுக்கு பூமாலை கொடுத்து வர சொல்லிவிட்டு
சொல்லாமல் சென்று விட்டாய்
நீ தொடுத்த மாலை வாடவில்லை வைத்த
தீபம் அணையவில்லை அதற்குள் நீ
அணைந்து விடடாய் உயிரற்று நிற்கின்றேன் எம்
மகனை காப்பதற்கு உறுதுணையாய் நீ இருப்பாய்
என்ற உறுதியில்
கலங்கி நிற்கும் கணவன்

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி

- ஞா. வரதகுமார் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகன் இரங்கல்

அன்னையே தெய்வமே - நீ
தெய்வமாகிப் போனாயோ
அன்பூட்டி பண்பூட்டி
அறிவூட்ட அயல்நாடு அனுப்பி வைத்தாய்
அம்மா நான் திரும்பும் முன்
அவசரமாய் சென்ற தேன்
காலன் கயவன் அவன்
களவாடி சென்று விட்டான்
நான் உன் முகம் காணாது
நாள்தோறும் கதறுகிறேன்
நாளை நாளை என நாட்கள் பல
கடந்தாலும் நான் திரும்பும்போது நீ
இல்லை என்ற ஏக்கம் எனை வாட்டுகிறது
இறைவனுக்கே இரக்கமில்லை என் உயிரை
பிரித்து விட்டான்.

அன்பு மகன்
குரு பிரகாஷ்

## சகோதரி இரங்கல்

அக்காச்சி என இனி யாரை அழைப்பேன்
ஆறாத்துயரில் எனை ஆழ்த்தி அமரர் ஆகிப் போனாயே
எனக்காக உழைத்து நீ உதிர்ந்து போனாயே
எண்ணம் அறிந்து உதவிகள் செய்திடுவாய்
உன் துணை இன்றி இனி நான் என் செய்வேன்
தூரத்தே இருந்தாலும் துணையாய் இருந்தவளே
வாரந்தவறாது எமை அழைத்து வாழ்க்கை நெறி சொல்லிடுவாய்
என் துணையாய் இருந்தவளே என் உயிரானவளே
தனி மரமாய் எனையாக்கி இறைவனடி சேர்ந்தாயே
இனி எப்போ நான் காண்பேன் என்றும்
உன் பிரிவால் வாடும் சகோதரி உன்
ஆத்மா சாந்தியடைய இறைவனடி
வேண்டுகின்றேன்.

சகோதரி
திருமதி.பாமதி வரதராசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் இரங்கல்

அம்மா பெரியம்மா இணையில்லா
அன்பின் தெய்வமாய் பண்பின் சிகரமாய்
பாசத்தின் இருப்பிடமாய் அன்புடன் எமை
அழைத்து நலம் பல விசாரிப்பீர்கள்
உங்கள் குரல் கேட்டு மனம் ஆறுவோம்
எமக்காக நீங்கள் காத்த விரதங்கள் எத்தனை
அர்ச்சனைகள் செய்து எமக்காக வேண்டுவீர்கள் - எங்கள்
அம்மாவை விட எம்மில் அதிகம் அன்பு செலுத்தினீர்கள்
எங்கள் பெரியம்மா என பெருமையுடன் சொல்வோம்
அத்தனையும் பொய்யாக்கி ஆண்டவன்
அழைத்தானே கதறுகின்றோம்
உம் பிரிவை எம்மால் ஏற்க முடியாது
என்றும் ஏமுடன் வாழ்வதாய் எண்ணி
வாடும் ................

உங்கள் அன்பு மகன் மகள்
சாங்கவி, சாங்கீர்த்தன் (கனடா)

## மருமக்கள் இரங்கல்

தினமது எம்மை மறவாது
தேடியே அன்பை பொழிந்து
தித்திப்பாய் உணவு தந்து
பாசமாய் இருந்தீரே மாமி

அனைவருக்கும் உதவிடும் மனங்
கொண்டு ஆதரித்தீரே நோகடிக்கா
பெருந்தன்மை கொண்டவரே நீரும்
எம்மை மறந்து எங்கு போனீரோ

ஆறாத் துயரானோம் அல்லலெனுந்
பெருந்துயரில் வீழ்ந்து தவிக்கின்றோம்
ஆண்டவனே பறித்தெடுத்த மாமியை
தாரும் தாழ்வாய் பணிகின்றோமே!

மருமக்கள்
மயூரன், தயாபரன்,
அருள்நேசன், கோகிலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி - சந்திப்பு

சித்திரை 28 திங்கள் மதியம்
ஆயுர்வேத மருத்துவமனை
நீண்டுயர்ந்த மர நிழலில்
கைதொலைபேசியில் பேசியபடி
கண்களாலெனை அழைத்து
அருகில் நின்ற உமது
துணைவருடன் பேசுமாறு........

கோவில் காணி விடயங்கள்
ஆறுதலாக உம்வாயிலிருந்து
வந்த சொற்களை நான்
பொறுக்கி சமாதானப்படுத்த
பட்ட பாடுகள் இருக்கின்றதே
எல்லாம் கூட துணைவரும் அறிய.....

நானறியேன் எமது சந்திப்பும்
இந்த நிமிடந்தான் கடைசியென்று

மரணம் - காலன் - நாள் - நேரம்
நீரும் - நானும் - எவருமே - அறியாத
புதிர் - எனபது - அநுபவ - உண்மை.

- திருமலை சுந்தா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிராமி பட்டர் அருளிய

# அபிராமி அந்தாதி



## காப்பு

தாரமர் கொன்றையும் சண்பகமாலையும் சாத்தும் தில்லை
ஊரார்தம் பாகத்து உமைமைந்தனே உலகேழும் பெற்ற
சீரபிராமி அந்தாதி எப்போதும் என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதியே நிற்கக் கட்டுரையே

## நூல்

### ஞானமும் நல்வித்தையும் பெற

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்குமத் தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே! 1

### பிரிந்தவர் ஒன்று சேர

துணையும் தொழுந்தெய்வமும் பெற்றதாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையுமென் பாசாங்குசமும் கையில்
அணையும் திரிபுர சுந்தரி அறிந்தனயே 2

### குடும்பக் கவலையிலிருந்து விடுபட

அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்து கொண்டு
செறிந்தேன் உனது திருவடிக்கே திருவே வெருவிப்
பிறந்தேன் நின் அன்பர் பெருமை எண்ணாத கருமநெஞ்சால்
மறிந்தே வீழும் நரகுக்கு உறவாய மனிதரையே 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உயர்பதவிகளை அடைய

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்து சென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என் புந்தி எந்நாளும் பொருந்துகவே 4

### மனக்கவலை தீர

பொருந்திய முப்புரை செப்புவரை செய்யும் புணர் முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம் என் சென்னியதே 5

### மந்திர சித்தி பெற

சென்னியது உன் பொன் திருவடித்தாமரை சிந்தையுள்ளே
மன்னியது உன் திருமந்திரம் சிந்தூர வண்ணப் பெண்ணே
முன்னிய நின் அடியாருடன் கூடி முறைமுறையே
பண்ணியது என்றும் உன்றன் பரமாகம பத்ததியே 6

### மலையென வருந்துன்பம் பனியென நீங்க

ததியுறு மத்திற் சுழலும் என் ஆவிதளர் விலதோர்
கதியுறு வண்ணம் கருது கண்டாய் கமலாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும்மாலும் வணங்கியென்றும்
துதியுறு சேவடியாய் சிந்துரானனை சுந்தரியே 7

### பற்றுகள் நீங்கி பக்தி பெருகிட

சுந்தரி எந்தை துணைவி என் பாசத்தொடரை யெல்லாம்
வந்தரி சிந்தூர வண்ணத்தினாள் மகிடன் தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
சுந்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அனைத்தும் வசமாக

கருத்தன் எந்தைதன் கண்ணன் வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பால் அழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமும் செங்கைச் சிலையும் அம்பும்
முருத்தன் மூரலும் நீயும் அம்மே வந்தென் முன் நிற்கவே 9

### மோட்ச சாதனம் பெற

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை
என்றும் வணங்குவது உன்மலர்த்தாள் எழுதாமறையின்
ஒன்றும் அரும்பொருளே அருளே உமையே இமயத்து
அன்றும் பிறந்தவளே அழியா முத்தி ஆனந்தமே 10

### இல்வாழ்க்கையில் இன்பம் பெற

ஆனந்தமாய் என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய்
வானந்த மான வடிவுடையாள் மறை நான்கினுக்கும்
தானந்த மான சரணாவிந்தத் தவளநிறக்
கானந்தம் ஆடரங்காம் எம்பிரான் முடிக்கண்ணியதே 11

### தியானத்தில் நிலை பெற

கண்ணியதுன்புகழ் கற்பதுன் நாமம் கசிந்து பத்தி
பண்ணிதுன் இரு பாதாம் புயத்தில் பகல் இரவா
நண்ணிய துன்னை நயத்தோர் அவையத்துள் நான் முன்செய்த
புண்ணியம் எது என் அம்மே புவி ஏழையும் பூத்தவளே 12

### வைராக்கிய நிலை எய்த

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின்கரந்தவளே பின்கரந்தவளே கறைக்கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னை அன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமை பெற

வந்திப்பவர் உன்னை வானவர் தானவர் ஆனவர்கள்
சிந்திப்பவர் நல் திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப்பவர் அழியாப் பரமானந்தர் பாரில் உன்னைச்
சந்திப்பவர்க்கு எளிதாம் எம்பிராட்டி நின் தண்ணளியே 14

பெருஞ் செல்வமும் பேரின்பமும் பெற

தண்ணளிக்கென்று முன்னே பல கோடி தவங்கள் செய்வார்
மண்ணளிக்கும் செல்வமோ பெறுவர் மதிவானர்தம்
விண்ணளிக்கும் செல்வமும் அழியாமுர்த்தி வீடுமன்றோ
பண்ணளிக்கும் சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே 15

முக்காலமும் உணரும் திறன் உண்டாக

கிளியே இளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே ஒளிரும் ஒளிக்கிடமே எண்ணில் ஒன்றுமில்லா
வெளியே வெளிமுதல் பூதங்களாகி விரிந்த அம்பே
அளியேன் அறிவளவிற்கு அளவானது அதிசயமே 16

கன்னிகைகளுக்கு நல்ல வரன் அமைய

அதிசயமான வடிவுடையாள் அரவிந்தமெல்லாம்
துதிசெய ஆனை சுந்தரவல்லி துணை இரதி
பதிசயமானது அபசயமாக முன் பார்த்தவர்தம்
மதிசயமாக வன்றோ வாம பாகத்தை வவ்வியதே 17

மரணபயம் நீங்க

வவ்விய பாகத்து இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக்கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்தென்னை ஆண்டற்பொற்பாதம் ஆகி வந்து
வெவ்விய காலன் மேல் வரும்போது வெளிநிற்கவே 18

பேரின்ப நிலையடைய

வெளிநின்ற மேனியைப் பார்த்தென் விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்றதென்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பது மேவி உறைபவளே 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வீடுவாசல் முதலிய செல்வங்கள் உண்டாக

உறைகின்ற நின் திருக்கோயில் நின்கேள்வர் ஒரு பக்கமோ
அறைகின்ற நான்மறையின் அடியோ முடியோ அமுதம்
நிறைகின்ற வெண் திங்களோ கஞ்சமோ என்றன் நெஞ்சகமோ
மறைகின்ற வாரிதியோ பூரணசல மங்கலையே 20

### அம்பிகையை வழிபடாமல் இருந்த பாவம் தொலைய

மங்கலை செங்கலசம் முலையாள் மலையாள் வருணச்
சங்கலை செங்கைச் சகலகலா மயில்தாவு கங்கை
பொங்கலை தங்கும் புரிசடையோன் புடையாள் உடையாள்
பிங்கலை நீலி செய்யாள் வெளியாள் பசும் பெண் கொடியே 21

### இனிப்பிறவா நெறி அடைய

கொடியே இளவஞ்சிக் கொம்பே எனக்கு வம்பே பழுத்த
படியே மறையின் பரிமளமே பனி மால் இமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே
அடியேன் இறந்திங்கு இனிப்பிறவாமல் வந்து ஆண்டுகொள்ளே 22

### எப்போதும் மகிழ்ச்சியாய் இருக்க

கொள்ளேன் மனத்தில்நின் கோலமல்லதன்பர் கூட்டந்தன்னை
விள்ளேன் பரசமயம் விரும்பேன் வியன்மூவுலகுக்கு
உள்ளே அனைத்தினுக்கும் புறம்பே உள்ளதே விளைந்த
கள்ளே களிக்கும் களியே என் கண்மணியே. 23

### நோய்கள் விலக

மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கழகே அணுகாதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்மபாதம் பணிந்தபின்னே. 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நினைத்த காரியம் நிறைவேற

பின்னே திரிந்துன் அடியாரைப்பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்று கொண்டேன் முதல் மூவருக்கும்
அன்னே உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே
என்னை இனியுன்னை யான்மறவாமல் நின்று ஏத்துவேனே. 25

### செல்வாக்கும் செல்வாக்கும் பெருக

ஏத்தும் அடியவர் ஈரேழுலகினையும் படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவராம் கமழ்பூங்கடம்பு
சாத்தும் குழல் அணங்கே மணம் நாறும் நின் தாளிணைக்கென்
நாத்தங்கு புன்மொழி ஏற்றியவாறு நகையுடைத்தே 26

### மனநோய் அகல

உடைத்தனை வஞ்சப்பிறவியை உள்ளம் உருகும் அன்பு
படைத்தனை பத்ம பதயுகம் சூடும் பணி எனக்கே
அடைத்தனை நெஞ்சத்தழுக்கையெல்லாம் நின் அருட்புனலால்
துடைத்தனை சுந்தரி நினனருள் ஏதென்று சொல்லுவதே 27

### இம்மை மறுமை இன்பங்கள் அடைய

சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழு அவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே 28

### எல்லா சித்திகளும் அடைய

சித்தியும்சித்தி தரும் தெய்வமாகித் திகழும் பரா
சக்தியும் சக்தி தழைக்கும் சிவமும் தவம் முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும் வித்தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே 29

### விபத்து ஏற்படாமல் இருக்க

அன்றே தடுத்தென்னை ஆட்கொண்டாய் கொண்டதல்ல என்கை
நன்றே உனக்கினி நான் என்செயினும் நடக்கடலுள்
சென்றே விழினும் கரையேற்றுகை நின் திருவுளமே
ஒன்றே பல உருவே அருவே என் உமையவளே
30



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மறுமையில் இன்பம் உண்டாக

உமையும் உமையொரு பாகரும் ஏக உருவில் வந்திங்கு
எமையும் தமக்கன்பு செய்யவைத்தார் இனி எண்ணுதற்குச்
சமையங்களும் இல்லை ஈன்றெடுப்பாள் ஒரு தாயும் இல்லை
அமையும் அமையுறு தோளியர் மேல்வைத்த ஆசையுமே 31

### துர்மரணம் வராமலிருக்க

ஆசைக்கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லல் பட இருந்தேனை நின்பாதமெனும்
வாசக்கமலம் தலைமேல் வலியவைத்து ஆண்டுகொண்ட
நேசத்தை என் சொல்லுவேன் ஈசர்பாகத்து நேரிழையே 32

### இறக்கும் நிலையிலும் அம்பிகை நினைவோடு இருக்க

இழைக்கும் வினைவழியே அடுங்காலன் எனை நடுங்க
அழைக்கும் பொழுது வந்து அஞ்சல் என்பாய் அத்தர் சித்தம் எல்லாம்
குழைக்கும் களபக்குவிமுலை யாமளைக் கோமளமே
உழைக்கும் பொழுது உன்னையே அன்னையே என்பன் ஓடிவந்தே
33

### சிறந்த நன்செய் நிலங்கள் கிடைக்க

வந்தே சரணம் புகும் அடியாருக்கு வானுலகம்
தந்தே பரிவோடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கற் ஆகமும் பாகமும் பொன்
செந்தேன் மலரும் அலர்க்கதிர் ஞாயிறும் திங்களுமே 34

### திருமணம் நிறைவேற

திங்கள் பகவின் மணநாயிறுஞ் சீறடி சென்னிவைக்க
எங்கட்கு ஒருதவம் எய்தியவா எண்ணிறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவமெய்துமோ தரங்கக்கடலுள்
வெங்கட் பணியணை மேல்துயில் கூரும் விழுப்பொருளே 35



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பழைய வினைகள் வலிமை அழிய

பொருளே பொருள் முடிக்கும் போகமே அரும்போகம் செய்யும்
மருளே மருளில் வரும் தெருளே என்மனத்து வஞ்சத்து
இருளேது மன்றி ஒளிவெளியாகி இருக்கும் உன்றன்
அருளேது அறிகின்றிலேன் அம்புயாதனத்து அம்பிகையே 36

### நவமணிகளைப் பெற

கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்துமாலை விட அரவின்
பைக்கே அணிவது பன்மணிக்கோவையும் பட்டும் எட்டுத்
திக்கே அணியும் திருவுடையானிடம் சேர்பவளே 37

### வேண்டியதை வேண்டியவாறு அடைய

பவளக்கொடியில் பழுத்த செவ்வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகையும் துணையா எங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணை முலையாள்
அவளைப் பணிமின் கண்டீர் அமராவதி ஆளுகைக்கே 38

### கருவிகளைக் கையாளும் வலிமை பெற

ஆளுகைக்கு உந்தன் அடித்தாமரைகளுண்டு அந்தகன்பால்
மீளுகைக்கு உந்தன் விழியின் கடையுண்டு மேல் இவற்றின்
மூளுகைக்கு என்குறை நின்குறையே அன்று முப்புரங்கள்
மாளுகைக்கு அம்பு தொடுத்த வில்லான் பங்கில் வாணுதலே 39

### பூர்வபுண்ணியம் பலன்தர

வாணுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற்கு எண்ணிய எம்பெருமாட்டியை பேதை நெஞ்சில்
காணுதற் அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும் அன்பு
பூணுதற்கு எண்ணிய எண்ணமன்றோ முன்செய் புண்ணியமே 40

### நல்லடியார் நட்புப்பெற

புண்ணியம் செய்தனமே மனமே புதுப்பூங்குவளைக்
கண்ணியும் செய்ய கணவரும் கூடி நம காரணத்தால்
நண்ணியிங்கே வந்து தம் அடியார்கள் நடுவிருக்கப்
பண்ணி நம் சென்னியிக் மேல் பத்மபாதம் பதித்திடவே 41



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகினை வசப்படுத்த

இடங்கொண்டு விம்மி இணைகொண்டு இறுகி இளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலை கொண்டு இறைவர் வலிய நெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட அல்குல் பனிமொழி வேதப்பரிபுரையே 42

## தீமைகள் ஒழிய

பரிபுரச்சீறடிப் பாசாங்குசை பஞ்சபாணியின் சொல்
திருபுரசுந்தரி சிந்துர மேனியள் தீமை நெஞ்சில்
புரிபுரவஞ்சரை அஞ்சக்குனி பொருப்புச் சிலைக்கை
எரிபுரைமேனி இறைவர் செம்பாகத்து இருந்தவளே 43

## பிரிவுணர்ச்சி அகல

தவளே இவள் எங்கள் சங்கரனார் மனைமங்கலமாம்
அவளே அவர்தமக்கு அன்னையும் ஆயினள் ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம்
துவளேன் இனியொரு தெய்வம் உண்டாக மெய்த்தொண்டு செய்தே
44

## உலகோர் பழியிலிருந்து விடுபட

தொண்டு செய்யாது நின்பாதந்தொழாத துணிந்திச்சையே
பண்டு செய்தார் உளரோ இலரோ அப்பரிசடியேன்
கண்டு செய்தால் அது கை தவமோ அன்றிச் செய்தவமோ
மீண்டும் செய்தாலும் பொறுக்கை நன்றேபின் வெறுக்கையன்றே
45

## நல்நடத்தையோடு வாழ

வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம்மடியாரைமிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன்றே புதுநஞ்சையுண்டு
கறுக்குந் திருமடற்றாள் இடப்பாகம் கலந்த பொன்னே
மறுக்குந் தகைமைகள் செய்யினும் யான் உன்னை வாழ்த்துவனே
46



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யோக நிலை அடைய

வாழும் படியொன்று கண்டு கொண்டேன் மனத்தே ஒருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை யெட்டும் எட்டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே 47

### உடல்பற்று நீங்க

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்து நெஞ்சில்
இடரும் தவிர்த்து இமைப்போது இருப்பார் பின்னும் எய்துவாரோ
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே 48

### மரணத்துன்பம் இல்லாதிருக்க

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவி வெங்கூற்றுக்கு இட்ட
வரம்பை அடுத்து மருகும் அப்போதே வளைக்கை அமைத்து
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்து அஞ்சல் என்பாய்
நரம்பை அடுத்த இசை வடிவாய் நின்ற நாயகியே 49

### அம்பிகையை நேரில் காண

நாயகி நான்முகி நாராயணி கை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கியென்று
ஆயகி ஆதி உடையாள் சரணம் அரண் தமக்கே 50

### மோகம் நீங்க

அரணம் பொருளென்று அருள் ஒன்றில்லாத அசுரர்தங்கள்
முரண் அன்று அழிய முனிந்த பெம்மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே 51

### பெருஞ் செல்வம் அடைய

வையம் துரகம் மதகரி மாமகுடம் சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனையாள் அடித்தாமரைக்கு அன்பு முன்பு
செய்யும் தவமுடையார்க்கு உளவாகிய சின்னங்களே 52



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யுணர்வு நீங்க

சின்னஞ்சிறிய மருங்கினிற் சாத்திய செய்யப்பட்டும்
பென்னம்பெரிய முலையும் முத்தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங்கரிய குழலுங்கண் மூன்றுங் கருத்தில் வைத்துத்
தன்னந் தனியிருப்பார்க்கு இது போலும் தவம் இல்லையே 53

### கடன் தீர

இல்லாமை சொல்லி ஒருவர் தம்பாற் சென்று இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல் நித்த நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம்பால் ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே 54

### மோன நிலை எய்த

மின் ஆயிரம் ஒரு மெய்வடிவாகி விளங்குகின்ற(து)
அன்னாள் அகமகிழ் ஆனந்தவல்லி அருமறைக்கு
முன்னாய் நடுவெங்குமாய் முடிவாய முதல்விதன்னை
உன்னாது ஒழியினும் உன்னினும் வேண்டுவ தொன்றில்லையே
55

### யாவரும் வசமாக

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகெங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கி நிற்பாள் என்றன் நெஞ்சின் உள்ளே
பொன்றாது நின்று புரிகின்றவா! இப்பொருளறிவார்
அன்று ஆலிலையில் துயின்ற பெம்மானும் என் ஐயனுமே 56

### வறுமை ஒழிய

ஐயன் அளந்தபடி இருநாழிகொண்டு அண்டமெல்லாம்
உய்ய அறம் செயும் உன்னையும் போற்றி ஒருவர் தம்பால்
செய்ய பசுந்தமிழ் பாமாலையும் கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்ப வைத்தாய் இதுவோ உன்தன் மெய்யருளே 57

### மன அமைதி பெற

அருணாம் புயத்தும் என் சித்தாம்புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையல் நல்லாள் தகைசேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமும் கராம்புயமும்
சரணாம் புயமும் அல்லால் கண்டிலேன் ஒரு தஞ்சமுமே 58



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிள்ளைகள் நல்லவர்களாக வர

தஞ்சம் பிறிதில்லை ஈதல்லது என்று உன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன் ஒற்றை நீள்சிலையும்
அஞ்சு அம்பும் இக்கு அலராக நின்றாய் அறியாரெனினும்
பஞ்சு அஞ்சு மெல்லடியார் அடியார் பெற்ற பாலரையே 59

### மெய்யுணர்வு பெற

பாலினுஞ் சொல் இனியாய் பனிமாமலர்பாதம் வைக்க
மாலினும் தேவர் வணங்க நின்றோன் கொன்றை வார் சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும் மெய்ப்பீடம் ஒரு
நாலினும் சால நன்றோ அடியேன் முடை நாய்த்தலையே 60

### மாயையை வெல்ல

நாயேனையும் இங்கொரு பொருளாக நயந்து வந்து
நீயே நினைவின்றி ஆண்டு கொண்டாய் நின்னை உள்ள வண்ணம்
பேயேன் அறியும் அறிவு தந்தாய் என்ன பேறு பெற்றேன்
தாயே மலை மகளே செங்கண்மால் திருத்தங்கச்சியே 61

### எத்தகைய அச்சமும் அகல

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரம் சாய்த்து மத
வெங்கண் கரியுரி போர்த்த செஞ்சேவகன் மெய் அடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகனகச்
செங்கைக் கரும்பும் மலரும் எப்போதும் என்சிந்தையதே 62

### அறிவு தெளிவோடு இருக்க

தேறும்படி சில ஏதுவும் காட்டிமுன்வெல்கதிக்குக்
கூறும் பொருள் குன்றில் கொட்டும் தறிகுறிக்கும் சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும்
வேறும் சமயமுண்டென்று கொண்டாடிய வீணருக்கே 63

### பக்தி பெருக

வீணே பகலிவர் தெய்வங்கள் பால் சென்று மிக்க அன்பு
பூணேன் உனக்கு அன்பு பூண்டு கொண்டேன் நின்புகழ்ச்சியன்றிப்
பேணேன் ஒரு பொழுதும் திருமேனிப் பிரகாசமின்றிக்
காணேன் இருநிலமும் திசை நான்கும் ககனமுமே 64

### ஆன்மகப்பேறு அடைய

ககனமும் வானும் புவனமும் காணவில் காமல் அங்கம்
தகனம் முன்செய்த தவப்பெருமாற்குப் தடக்கையும் செம்
மகனும் முந்நான்கு இரு மூன்று எனத்தோன்றிய முதறிவின்
மகனும் உண்டாயதன்றோ வல்லி நீ செய்த வல்லபமே 65

### கவிஞராக

வல்லபம் ஒன்றறியேன் சிறியேன் நின் மலரடிச்செம்
பல்லவம் அல்லது பற்றொன்றிலேன் பசும்பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய் வினையேன் தொடுத்த
சொல் அவமாயினும் நின்திரு நாமங்கள் தோத்திரம் 66

### பகைவர்கள் அழிய

தோத்திரம் செய்து தொழுது மின்போலும் நின்தோற்றம் ஒரு
மாத்திரைப்போதும் மனத்தில் வையாதவர் வண்மை குலம்
கோத்திரம் கல்வி குணம் குன்றி நாளும் குடில்கள் தொறும்
பாத்திரம் கொண்ட பலிக்கு உழலா நிற்பர் பாரெங்குமே 67

### நிலம் வீடு போன்ற செல்வங்கள் பெருக

பாரும் புனலும் கனலும் வெங்காலும் படர்விசும்பும்
ஊரும் உருகு சுவையொளி ஊறொளி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீறடிக்கே
சாருந் தவம் உடையார் படையாத தனம் இல்லையே 68

### சகல சௌபாக்கியங்களும் அடைய

தனம் தரும் கல்விதரும் ஒரு நாளும் தளர்வறியா
மனம் தரும் தெய் வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிலாமி கடைக் கண்களே 69

### நுண்கலைகளில் சித்தி பெற

கண்களிக்கும்படி கண்டு கொண்டேன் கடம்பாடவியில்
பண்களிக்கும் குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக்கும் பச்சை வண்ணமும் ஆகி மதங்கர் குலப்
பெண்களில் தோன்றிய எம்பெருமாட்டிதன் பேரழகே 70



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மனக்குறைகள் தீர

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம் புயத்தாள் பனிமாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழிவுற்று நின்ற நெஞ்சே இரங்கேல் உனக்கு என்குறையே 71

### பிறவிப்பிணி தீர

என்குறை தீரநின்று ஏத்துகின்றேன் இனியான் பிறக்கின்
நின்குறையே அன்றி யார்குறை காண் இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீர எங்கோன் சடைமேல் வைத்த தாமரையே 72

### குழந்தைப்பேறு உண்டாக

தாமம் கடம்பு படைபஞ்சபாணம் தனுக்கரும்பு
யாமம் வயிரவர் ஏத்தும் பொழுது எமக்கென்று வைத்த
சேமம் திருவடிச் செங்கைகள் நான்கு ஒளி செம்மை அம்மை
நாமம் திரிபுரை ஒன்றோடு இரண்டு நயனங்களே 73

### தொழில் மேன்மை அடைய

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராம வல்லி அடியிணையைப்
பயன் என்று கொண்டவர் பாவையர் ஆடவும் பாடவும்பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே 74

### விதியை வெல்ல

தங்குவர் கற்பக தாருவின் நிழலில் தாயர் இன்றி
மங்குவர் மண்ணில் வழுவாய் பிறவியை மால்வரையும்
பொங்குவர், ஆழியும் ஈரேழ் புவனமும் பூத்தஉந்திக்
கொங்கு இவர் பூங்குழலாள் திருமேனி குறித்தவரே 75

### தனக்கு உரிமையானதைப் பெற

குறித்தேன் மனத்தின் நின் கோலமெல்லாம் நின்குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டு கிண்டி
வெறித்தேன் அவிழ் கொன்றை வேணிப்பிரான் ஒரு கூற்றை மெய்யில்
பறித்தேன் குடிபுகு தும்பஞ்சபாண பயிரவியே 76



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பகை அச்சம் நீங்க

பயிரவி பஞ்சமி பாசாங்குசை பஞ்சபாணி வஞ்சகர்
உயிர் அவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிருங்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே 77

### சகல செல்வங்களையும் அடைய

செப்பும் கனக கலசமும் போலுந் திருமுலைமேல்
அப்பும் களப அபிராமவல்லி அணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதி வைத்தேன் என துணை விழிக்கே 78

### கட்டுகளில் இருந்து விடுபட

விழிக்கே அருள் உண்டு அபிராம் வல்லிக்கு வேதம் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு அவ்வழி கிடைக்கப்
பழிக்கே சுழன்று வெம்பாவங்களே செய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு என்ன கூட்டு இனியே 79

### பெற்ற மகிழ்ச்சி நிலைத்திட

கூட்டியவா என்னைத் தன்னடி யாரில் கொடியவினை
ஓட்டியவா என்கண் ஓடியவா தன்னை உள்ள வண்ணம்
காட்டியவா கண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா
ஆட்டியவா நடமாடகத் தாமரை ஆரணங்கே 80

### நன்னடத்தை உண்டாக

அணங்கே அணங்குகள் நின்பரிவாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகிலேன் நெஞ்சில் வஞ்சகரோடு
இணங்கேன் எனது உனது என்றிருப்பார் சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவு ஒன்றிலேன் என்கண் நீ வைத்த பேரளியே 81

### மன ஒருமைப்பாடு அடைய

அளியார் கமலத்தில் ஆரணங்கே அகிலாண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர்திருமேனியை உள்ளுதொறும்
களியாகி அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின் எங்ஙனே மறப்பேன் நின் விரகினையே 82



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஏவலர் பலர் உண்டாக

விரவும் புதுமலர் இட்டு நின்பாத விரைக் கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல்லார் இமையோர் எவரும்
பரவும் பதமும் அயிராவதமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக்காவும் உடையவரே 83

### சங்கடங்கள் தீர

உடையாளை ஒல்குசெம்பட்டுடையாளை ஒளிர்மதிச்செஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடையாளைத் தயங்கு நுண்ணூல்
இடையாளை எங்கள் பெம்மான் இடையாளை இங்கு என்னையினிப்
படையாளை உங்களையும் படையா வண்ணம் பார்த்திருமே 84

### துன்பங்கள் நீங்க

பார்க்கும் திசைதொறும் பாசாங்குசமும் பனிச்சிறைவண்டும்
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்பு என அல்லல் சிற்றிடையும்
தீர்க்கும் திரிபுரையாள் திரு மேனியும் சிற்றிடையும்
வார்க்குங்கும மலையும் முலைமேல் முத்து மாலையுமே 85

### ஆயுத பயம் நீங்க

மால் அயன் தேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையும் சூடகக் கையையும் கொண்டு கதித்த கப்பு
வேலை வெங்காலன் என்மேல் விடும்போது வெளிநில் கண்டாய்
பாலையும் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே 86

### செயற்கரிய செய்து புகழ்பெற

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின்திருமூர்த்தி என்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்றதால் விழியால் மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படி ஒரு பாகங் கொண்டாளும் பராபரையே 87

### எப்போதும் அம்பிகை அருள் பெற

பரமென்று உனை யடைந்தேன் தமியேனும் உன் பத்தருக்குள்
தரமன்று இவனென்று தள்ளத் தகாது தரியலர்தம்
பரமன்று எரியப் பொருப்புவில் வாங்கிய போதில் அயன்
சிரமொன்று செற்றகையான் இடப்பாகம் சிறந்தவளே 88



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோக சித்தி பெற

சிறக்கும் கமலத் திருவே நின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும் நின் துணைவரும் நீயும் துரியமற்ற
உறக்கந்தர வந்து உடம்போடு உயிர்உறவு அற்று அறிவு
மறக்கும் பொழுது என் முன்னே வரல் வேண்டும் வருந்தியே 89

கணவன் மனைவி கருத்த வேற்றுமை நீங்க

வருந்தா வகையென் மனத்தாமரையினில் வந்து புகுந்து
இருந்தாள் பழைய இருப்பிடமாக இனி எனக்குப்
பொருந்தாது ஒரு பொருள் இல்லை விண்மேவும் புதல்வருக்கு
விருந்தாக வேலை மருந்தானதை நல்கும் மெல்லியலே 90

அரசாங்க செயலில் வெற்றி பெற

மெல்லிய நுண்ணிடை மின்னனையாளை விரிசடையோன்
புல்லிய மென்முலைப் பொன் அனையாளைப் புகழ்ந்து மறை
சொல்லிய வண்ணம் தொழும் அடியாரைத் தொழும் அவர்க்குப்
பல்லியம் ஆர்தெழ வெண்பகடு ஊரும் பதம் தருமே 91

மன நிலை பக்குவமடைய

பதத்தே உருகிநின் பாத்திலே மனம்பற்றி உன்றன்
இதத்தே ஒழுக அடிமை கொண்டாய் இனியான் ஒருவர்
மதத்தே மதிமயங்கேன் அவர்போன வழியும் செல்லேன்
முதல்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே 92

உள்ளத்தில் ஒளியுண்டாக

நகையே இஃதிந்த ஞாலமெல்லாம் பெற்ற நாயகிக்கு
முகையெ முகிழ் முலைமானே முதுகண் முடிவில் அந்த
வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பது நாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே 93

மனநிலை தூய்மையாக

விரும்பித்தொழும் அடியார் விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பி ஆனந்தமாகி அறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடுமாறி முன் சொன்ன எல்லாம்
தரும்பித்தர் ஆவரென்றால் அபிராமி சமயம் நன்றே 94

மன உறுதி பெற

நன்றே வருகினும் தீதே விளைகினும் நானறிவது
ஒன்றேயுமில்லை உனக்கேபரம் எனக்கு உள்ள எல்லாம்
அன்றே உனதென்று அளித்துவிட்டேன் அழியாதகுணக்
குன்றே அருட்கடலே இமவான் பெற்ற கோமளமே 95



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எங்கும் பெருமை பெற

கோமளவல்லியை அல்லியந் தாமரைக் கோயில் வைகும்
யாமள வல்லியை ஏதமிலாளை எழுதரிய
சாமள மேனிச் சகல காலமயில் தன்னைத் தம்மால்
ஆமளவும் தொழுவார் எழுபாருக்கும் ஆதிபரே 96

### புகழும் அறமும் வளர

ஆதித்தன் அம்புலி அங்கி, குபேரன் அமரர்தங்கோன்
போதிப் பிரமன் புராரி முராரி பொதிய முனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே 97

### வஞ்சகர் செயல்களிலிருந்து பாதுகாப்பு பெற

தைவந்த நின்னடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும் தலைவந்த ஆறுங் கரந்த தெங்கே
மெய்வந்த நெஞ்சின் அல்லால் ஒருகாலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகல் அறியா மடப் பூங்குயிலே 98

### அருள் உணர்வு வளர

குயிலாய் இருக்கும் கடம்பா அடவியிடைக் கோலவியன்
மயிலாய் இருக்கும் இமயாசலத்திடை வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில் கமலத்தின் மீது அன்னமாம்
கயிலாயருக்கு அன்று இமவான் அளித்த கனங்குழையே 99

### அம்பிகையை மனதில் காண

குழையைத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந்தோளும் கருப்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண் நகையும்
உழையைப் பொருகண்ணும் நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றனவே
100

### நூற்பயன்

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளைப் புவியடங்கக்
காத்தாளை அங்கையில் பாசாங்குசமும் கருப்பு வில்லும்
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கொரு தீங்கில்லையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீராமஜெயம்

# அருள்மிகு ஆஞ்சநேயர் பதிகம்

## அறுசீர்விருத்தம்

அஞ்சனா தேவி பெற்ற
அருந்தவப் பயனே ஞானம்
விஞ்சுமா ருதியே! வெற்றி
மிளிர்கதா யுதனே! நின்றாள்
தஞ்சமென் றடைந்தேன் எம்மைத்
தாங்கியே காத்தல் வேண்டும்
அஞ்சலென் றருளிச் செய்யும்
அநுமனே !போற்றி! போற்றி 01

அம்பரந் தாவிச் சென்றே
ஆழியைக் கடந்தாய் போற்றி!
நம்பரந் தாமன் இராம
நாமமே இசைப்பாய் போற்றி!
சேம்பொருள் வடிவே போற்றி
திருவருட் பயனே போற்றி!
ஐம்புலன் அடக்கி யாளும்
அநுமனே போற்றி!போற்றி! 02

பற்குணன் தேரின் மீது
பதாகையாய்ப் பறந்தாய் போற்றி!
சிற்குண ராம நாம
ஜெபமதே புரிவாய் போற்றி!
சற்குண மலையே போற்றி!
சஞ்சலம் தீர்ப்பாய் போற்றி!
ஆற்புத விஸ்வ ரூப
அநுமனே போற்றி! போற்றி! 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்த ராம நாமம்
அழகுடன் இசைத்துக் கொண்டே
தானந்தமாதி இல்லாத்
தலைவன் தாள் சேர்க்கும் இன்ப
மோனந்தான்தியானம் யோக
முறையெனகாட்டும் ஞான
ஆனந்தஆஞசநேய
ஆண்ணலே போற்றி! போற்றி! 04

அழகு சஞ்சீவி வெற்பை
அங்கையில் ஏந்தி வந்தே
எழில் உயிர் இழைய தோன்றல்
எய்திடச் செய்தாய் போற்றி
மழைமுகில் வண்ணன் இராமன்
வாழ்த்துரை பெற்றாய் போற்றி
அழிவிலா இன்பம் நல்கும்
அனுமனே போற்றி போற்றி 05

மாயமான் அதனால் நேர்ந்த
வஞ்சனைச் செயலா லந்தோ!
தூயமான் சீதை யுற்ற
துயர்கெட மாற்றி ஆங்கே
நேயமாய்த் தீயை வைத்து
நேரின மணிகொ ணர்ந்த
ஆய்தமிழ்ச் சொல்லின் செல்வ
அனுமனே போற்றி போற்றி 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலுடைக் குமரன் றாதை
வேடனே ஆற்றல் மிக்க
வாலுடை வள்ள லேநான்
மறைபொருள் வடிவே போற்றி!
மாலயன் தாயு வான
மாருதி ராம தூத!
ஆலய மாக எம்முன்
அமர்ந்தருள் அனுமான் போற்றி! 07

மாருதி என்னுந் தெய்வ
மன்னவா! மன்னுயிர்க்கோர்
ஆருயிர் ஆஞ்ச நேய
அண்ணலே காலை வண்ணச்
சூரியன் தேர்முன் சென்று
சுந்தரக் கல்வி கற்றாய்!
வீரிய அனுமன் என்னும்
வித்தகா! போற்றி! போற்றி! 08

ஸ்ரீ ராம ஜெயமே எல்லாச்
செல்வமும் நல்கும் என்றே
ஆராத காதல் கொண்டே
ஆனந்தக் கண்ணீர் கொட்டும்
சீராள! ராம பக்த!
சிரஞ்சீவி அநுமன் என்னும்
பேராள! ஆஞ்ச நேயப்
பெருமானே போற்றி! போற்றி! 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்ததை நினைத்த வாறே
நிகழ்த்திடும் காற்றின் செல்வா!
மனத்துயர் மாற்றி இன்பம்
வழங்கிடும் கவியே! ஏழை
இனத்துயர் மிகுந்து வாடும்
எம்மிடி தீர இன்னே
அனைத்து நற் செல்வம் நல்கி
அன்புடன் காப்பாய் போற்றி! 10

வஞ்சனை பில்லி சூன்யம்
மாற்றலர் ஏவல் பேய்கள்
அஞ்சியே ஓடச் செய்யும்
ஐயனே! ஆர ணங்கள்
கொஞ்சுபுன் னகைகு லாவும்
குளிர்முகக் கவிளங் கோவே!
அஞ்செழுத் தாஞ்ச நேய
அனுமனே! போற்றி! போற்றி! 11

## ஸ்ரீ ஆஞ்சநேயர்
## வருகைப் பதிகம்

அஞ்சனை தன்மகனே அழகிய கவிமுகனே!
செஞ்சொலின் நாயகனே! திருவருள் நாயகனே!
அஞ்சலென் றருள்புரியும் அனுமனெனுந் திருவே!
மஞ்சுள மாருதியே! வந்தருள் வந்தருளே!
ஆதவன் மாணவனே! அன்புரு வானவனே!
காதலுடன் தொழுதோம் காத்தருள் காத்தருளே!
நீதய வாய்வருவாய் நினைத்தநல் வரந் தருவாய்!
மாதவ மாருதியே வந்தருள் வந்தருளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமனின் தூதனெனும் எழில்மிகும் அனுமனே!
பாராமுகம் ஏனய்யா! பாலனெனக் கருள்வாயே!
தராதல முழுவதுமே தாங்கியே காப்பவனே!
புராதன மாருதியே வந்தருள் புரிந்தருளே!
ஈரேழு தலம்புகழும் இறைவனே! அனுமனே!
ஓராழி தனைக்கடந்தே ஒண் சுடர்மணி கொணர்ந்தாய்!
ஸ்ரீராமச் சந்திரனின் சிந்தையைக் குளிர வைத்தாய்!
வாராய் மாருதியே! வந்தருள் வந்தருளே!
உத்தம ராமபிரான் உள்ளம றிந்துதவும்
சித்தம ருத்துவனே சிற்குண அனுமனே!
நித்திய வாழ்வருளும் நின்மல சிவசொரூபா!
தத்துவ மாருதியே! வந்தருள் தந்தருளே!
ஊழ்வினை மாற்றியருள் ஒருதனிப் பரம் பொருளே!
ஏழிசை யானவனே! இடர்கெடுத் தாள்பவனே!
ஆழ்நிலை தியானசுகம் அளித்தருள் சித்தகுரு
வாழ்வருள் மாருதியே! வந்தருள் வந்தருளே!
எங்கள்கு லத்திருவே! எம்முயிர்க் கொரு துணையே!
சங்கடம் தீர்த்தருளும் சஞ்சீவி அனுமனே!
செங்கம லத்திருவின் திருவருள் பெற்றருள் வாய்!
மங்கல மாருதியே! வந்தருள் வந்தருளே!
ஏரார் சிலையொடித்தே எழில்மிகு ஜானகியைச்
சீராய் மணம்புரிந்த ஸ்ரீராமன் திருப்பெயரே
பாராய ணம்புரியும் பண்புள அனுமனே!
வாராய் மாருதியே! வந்தருள் வந்தருளே!
ஐம்புலச் சேட்டைகளை அடக்கிடும் அனுமனே!
செம்பொருள் வடிவழகா! தீவினை தீர்ப்பவனே!
நம்பிநின் தாளடைந்தேன் நல்வர மேதருவாய்!
எம்பெ ருமான் அனுமன் வந்தருள் வந்தருளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருதிரு ராமபிரான் ஒருபெருந் தூதனெனும்
ஒருதிருப் புகழ்மலிசீர் ஒருஜெய அனுமனே!
ஒருதிரு வருள்புரியும் ஒருபெருந் தத்துவனே!
ஒருதிரு மாருதியே! வந்தருள் வந்தருளே!
ஓமெனும் பிரணவமே! ஒருபரம் பொருள் வடிவே!
காமனை வென்றவனே! காலத்தை வென்றவனே!
சேமந லந்தருவாய்! ஸ்ரீஜெய அனுமனே!
மாமணி மாருதியே! வந்தருள் வந்தருளே!
அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத்தாவி
அஞ்சிலே ஒன்று ஆறாக ஆரியற் காகஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கு கண்டு அயலார்ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன் நம்மை அளித்துக் காப்பான்!
ஆஞ்சனேய வீரா! அனுமந்த சூரா!
வாயு குமரா! வானர வீரா!
ஸ்ரீராம் ஜெயராம்! ஜெய ஜெயராம்!
ஸ்ரீராம் ஜெயராம்! ஜெய ஜெயராம்!
ஸ்ரீராம் ஜெயராம்! ஜெய ஜெயராம்!

ஆஞ்சநேயனே ஆஞ்சநேயனே
அஞ்சலி சுதனே ஆஞ்சநேயனே (ஆஞ்ச)

சஞ்சீவியைக் கொணர்ந்த ஆஞ்சநேயனே
சிரஞ்சீவியை அருள் ஆஞ்சநேயனே
சீதையின் துயர் துடைத்த ஆஞ்சநேயனே
சிந்தையில் நீ இருப்பாய் ஆஞ்சநேயனே (ஆஞ்ச)
நீலக் கடலை ஒரு நீர்த தாரை போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவிக்குதித்த ஆஞ்சநேயனே
மைதிலியின் வரம்பெற்ற ஆஞ்சநேயனே
எங்கள் மனதினில் நீ இருப்பாய் ஆஞ்சநேயனே (ஆஞ்ச)

பொல்லாத இராவணனை இலங்கேசனைச் சிறு
புழுவாய் மதித்த ஆஞ்சநேயனே
ராமபக்தனாக வந்த ஆஞ்சநேயனே
ராமநாம தியானம் செய்யும் ஆஞ்சநேயனே (ஆஞ்ச)

ராம ராம ராம் ராம ராம ராம்
ராம ராம ராம் ராம ராம ராம்
ரகுபதி ராகவ ராஜா ராம்
பதீத பாவன சீதாராம்
ஈஸ்வர அல்லா தேரேராம்
சப்கோ சன்மத ஹே பகவான்
ராம ராம ராம் ராம ராம ராம்
ராம ராம ராம் ராம ராம ராம் (ஆஞ்ச)

எல்லா வளத்தோடும் என்றும் நலம்பெறவே
வள்ளலாய் திருமகளே வந்திடுக
செல்லாலே பாடிப் பரவுகிறோம் பால்போல
இம்மனையில் கூடிவருவாய் குழைந்து
உலகமெலாம் நிறைந்து நிற்கும்
ஓம் எனும் ஒலியே வாழி!
அலகிலா அருள் சுரக்கும்
அன்னையாம் சக்தி வாழி!
பல பல கலைகள் வாழி!
பண்புறு தொழில்கள் வாழி!
நலமுற உயிர்கள் காக்கும்
நடுநிலைப் பொருளே வாழி! வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ ஆஞ்சநேயர்

அஞ்சன வண்ணன் அயோத்தி இராமனின்
அடியனே! அருட்சீதை பக்தா!
அருங்கலைகள் கற்றவா! அருங்குணங் கொண்டவா!
அளக்க முடியாத வடிவா!
விஞ்சையர் அஞ்சிடும் விரிகடல் தாண்டியே
வீரரா வணனை வெல்ல
வெஞ்சமர் நிகழ்த்திய கோதண்ட ராமர்க்கு
விரைந்து சஞ்சீவி கொணர்ந்தாய்!
வெஞ்சினக் காண்டீபன் விரைரதக் கொடியாகி
விஜய ஜெயம் அருள் மாருதி
வித்தகா உத்தமா வினயம்மிக்க தூதுவா
வேண்டியவை வரைந் தளிப்பாய்
அஞ்சனை வாயுவின் அருந்தவப் புத்திரா
அண்டியவர்க் கருள்சிரஞ் சீவியே
ஆழ்வார்கள் பேட்டை யுறை ஆதித்ய சிஷ்யனே
அனுமனே ஆஞ்ச நேயா

## ஆஞ்சநேயர் மூல மந்திரம்

ஓம் - ஆம்- ஊம் ஐயுங்கிலியும்
சவ்வும் வவ்வும் சிங் வங்
நமசிவய வசியநம அறிமந்த
வசிய சுவாகா.

## ஸ்ரீ மாருதி கிருபை உண்டாக

ஸர்வ கல்யாண தாதாரம் ஸர்வ ஆபத் கமாருதம்
அபார கருணாமூர்த்திம் ஆஞ்ஜ நேயம் நமாம் யஹம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரியங்களில் வெற்றி பெற

ஸ்ரீ ராம தூத மஹாதீர ருத்தரவீர்ய ஸமுத்பவ!
அஞ்ஜநா கர்ப்ப ஸம்பூத வாயுபுத்ர நமோஸ்துதே
அஸாத்ய ஸாதக ஸ்வாமிந் அஸாத்யம் தவ கிம் வத
ராமதூத க்ருபாஸிந்தோ மத்கார்யம் ஸாதய ப்ரபோ

## ஆஞ்சநேயர் துதி

புத்தியும் பலமும் தூய
புகழோடு துணிவும் நெஞ்சில்
பத்தியும் அச்ச மில்லாப்
பணிவும் நோய் இல்லா வாழ்வும்
உத்தம ஞானச் சொல்லின்
ஆற்றலும் இம்மை வாழ்வில்
அத்தனை பொருளும் சேரும்
அனுமனை நினைப்பவர்க்கே

01. ஓம் ஆஞ்சநேய சுவாமியே போற்றி
02. ஓம் அஞ்சன புத்திரா போற்றி
03. ஓம் ஆதித்தன் பிரியனே போற்றி
04. ஓம் அலங்கார வீரனே போற்றி
05. ஓம் கிஷ்கிந்தை வாழ்ந்தனை போற்றி
06. ஓம் பீமசேனன் அண்ணனே போற்றி
07. ஓம் பாபவிமோசனா போற்றி
08. ஓம் ஸ்ரீராம தூதனே போற்றி
09. ஓம் லங்காதகன தீரனே போற்றி
10. ஓம் சஞ்சீவிமலை கொணர்ந்தாய் போற்றி
11. ஓம் சுந்தர காண்ட நாயகா போற்றி
12 .ஓம் சீதா துயர் துடைத்தாய் போற்றி
13. ஓம் சீதக்களபம் அணிந்தாய் போற்றி
14. ஓம் சிவப்பிரியா போற்றி
15. ஓம் நவவியாகரண மகாபண்டிதா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. ஓம் யோக நரசிம்ம பக்தனே போற்றி
17. ஓம் சாம்பவந்தர் அன்பனே போற்றி
18. ஓம் சாஸ்திரம் கற்றாய் போற்றி
19 .ஓம் துர்க்கையின் இனியனே போற்றி
20. ஓம் தூயவாழ் வளிப்பவா போற்றி
21. ஓம் பிரம்ம ரிஷியே போற்றி
22. ஓம் சர்வ ரோகம் தீர்ப்பாய் போற்றி
23 ஓம் அங்கார தாரை துதிப்பாய் போற்றி
24. ஓம் லங்கணி பணிந்தாய் போற்றி
25. ஓம் விபீஷணன் உயிரோய் போற்றி
26. ஓம் பாரிஜாத தருநந்தாய் போற்றி
27. ஓம் வாயு புத்ரா போற்றி
28. ஓம் வசந்தகால நாயகா போற்றி
29. ஓம் கந்தர்வ வித்யாகாரகாபோற்றி
30. ஓம் அங்கதன் நண்பனே போற்றி
31. ஓம் தாரையைக் காத்தோய் போற்றி
32. ஓம் திரிசடை புகழ்ந்தோய் போற்றி
33. ஓம் தீவினை அழிப்போய் போற்றி
34. ஓம் மங்களம் தருவோய் போற்றி
35. ஓம் மாருதி திருத்தாள் போற்றி
36. ஓம் வெற்றியின் மைந்தா போற்றி
37. ஓம் சக்தியின் பிள்ளாய் போற்றி
38. ஓம் கணையாழி தந்தாய் போற்றி
39. ஓம் சூடாமணி கண்டாய் போற்றி
40. ஓம் மதுவனம் திரிந்தாய் போற்றி
41. ஓம் நிகும்பலை அழித்தாய் போற்றி
42. ஓம் மைநாகம் பார்த்தோய் போற்றி
43. ஓம் அனுவெனப் புகுந்தாய் போற்றி
44. ஓம் ஆசையை வென்றாய் போற்றி
45. ஓம் கடிகையில் அமர்ந்தாய் போற்றி
46. ஓம் கங்கையில் நடந்தோய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. ஓம் சங்கரன் அருளா போற்றி
48. ஓம் சாமுண்டிப் பிரியா போற்றி
49. ஓம் ராகுவைப் பிடித்தாய் போற்றி
50. ஓம் கேதுவை அடித்தாய் போற்றி
51. ஓம் மகாபல பராக்கிரம வீரா போற்றி
52. ஓம் கடல்தனைக் கடந்தாய் போற்றி
53. ஓம் வைதேகி புகழ்தோய் போற்றி
54. ஓம் வஜ்ரதோள் உடையோய் போற்றி
55. ஓம் ராமபக்த ஹனுமானே போற்றி
56. ஓம் நவசக்தி அருள்பாலா போற்றி
57. ஓம் சிரஞ்சீவி போற்றி
58. ஓம் பிரபுவே போற்றி
59. ஓம் பலசித்தி பெற்றாய் போற்றி
60. ஓம் கவி சேனாபதியே போற்றி
61. ஓம் ரத்னகுண்டல பதயே போற்றி
62. ஓம் சஞ்சலம் தீர்க்கும் சுவாமியே போற்றி
63. ஓம் யோக ஆஞ்சனேயா போற்றி
64. ஓம் மாதங்க வனப்பிரியனே போற்றி
65. ஓம் அஞ்சனாகர்ப ஹனுமந்தா போற்றி
66. ஓம் சீதா யோக நிவாரணா போற்றி
67. ஓம் தசக்கிரிவ கர்வம் அழித்தாய் போற்றி
68. ஓம் வஜ்ரகாயா போற்றி
69. ஓம் மஹாத்மா போற்றி
70. ஓம் ராம பக்தாய போற்றி
71. ஓம் மச்சகந்தி பிரியா போற்றி
72. ஓம் மருத மரவாசா போற்றி
73. ஓம் கந்த மதன பர்வதா போற்றி
74. ஓம் கோதாவரி தீரனே போற்றி
75. ஓம் சூரனே போற்றி
76. ஓம் தீரனே போற்றி
77. ஓம் வீரனே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

78. ஓம் சுக்கிரிவப் பிரியா போற்றி
79. ஓம் ராமசூடாமணி கொடுத்தோய் போற்றி
80. ஓம் இந்திரப் பிரியா போற்றி
81. ஓம் காம ரூபனே போற்றி
82. ஓம் பிங்களாயா போற்றி
83. ஓம் மார்த்தாண்டயா போற்றி
84. ஓம் ஶ்ரீமதே போற்றி
85. ஓம் பஞ்சபூத பாவலா போற்றி
86. ஓம் சூரிய மண்டல பூஜிதா போற்றி
87. ஓம் ஹரிமர் கடமர் கடாய போற்றி
88. ஓம் யோக நரசிம்ம தூதனே போற்றி
89. ஓம் சீவகாருண்ய சிங்காரா போற்றி
90. ஓம் பக்த ஆஞ்சநேயா போற்றி
91. ஓம் பாதாளலிங்க பக்தனே போற்றி
92. ஓம் பரமதயாள கிருபாகரா போற்றி
93. ஓம் வேதியா போற்றி
94. ஓம் அகத்தியன் துதிப்போய் போற்றி
95. ஓம் பிரம்மச்சாரியே போற்றி
96. ஓம் அர்த்தசாஸ்திர ஹனுமானே போற்றி
97. ஓம் கந்தம் கமழும் மேனியாய் போற்றி
98. ஓம் ஆய கலைகள் அறிந்தாய் போற்றி
99. ஓம் வானர சிரேஷ்டா போற்றி
100.ஓம் வசந்தத்தின் எழிலே போற்றி
101.ஓம் தத்துவ ஞானியே போற்றி
102.ஓம் தசமுக பிரபுவே போற்றி
103.ஓம் நான்கு திருகரத்தோய் போற்றி
104.ஓம் நான்முகன் கொழுந்தே போற்றி
105.ஓம் சோளிங்கர் மணியே போற்றி
106.ஓம் சுடர் ஒளித் திருவே போற்றி
107.ஓம் ராமனின் தூதா போற்றி
108.ஓம் சீதா சமேத ராமபாத சேவகா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திர் பலம் யசோ தைர்யம் நிர்பயத்வம் ஆரோகதா
அஜாட்யம் வாக்படுத்வம்ச ஹனுமத் ஸ்மரணாத் பவேத்!
ஸர்வ கல்யாண தாதாரம் ஸர்வ ஆபத் கந மாருதம்
அபார கருணாமூர்த்திம் ஆஞ்சநேயம் நமாமி அஹம்.
ஸ்ரீ ராம ஜெயராம் ஜெய ஜெய ராம்!

## ஸ்ரீ ஆஞ்சநேய பஞ்ச ரத்தினம்

1. முன்னையிலங்கையில் மோதிரம் காட்டியே
அன்னை சீதையின் அருந்துயர் தீர்த்தவன்
இன்ன லெல்லாம் தீர்த்து ஆதரிக்கும் ஹனுமான்
பொன்னடி போற்றுவா ரெண்ணிய தெய்துவர்!

2. பரிதியைக் கனியெனப் பறித்திடச் சென்றவன்
துரிதமாய்த் தேர்முன்னோடி அருங்கலைத்
தெரிந்தவன் அஞ்சனா அருந்தவப் புதல்வன்
விரிகடல் தாண்டிய விக்ரம ஹனுமான்!

3. ராமனைத் தொழுவர் மாமனை தோறும்
நேமமாய் வந்து நிலைத்திருப்பவன்
வாமத்தில் மைதியோடு விளங்கும்
தாமரைக் கண்ணனின் தாளடி மறவான்!

4. அதிபலம் கொண்டு இலங்கையை எரித்தவன்
துதிப்பவர் துன்பங்கள் தீர்த்தருள் செய்பவன்
பதியுடன் ஜானகியை வாழ்ந்திடச் செய்தவன்
கதியென நினைப்பவர் கருதியதெய்துவர்!

5. ஜெய ஜெய மாருதி ஜெய ஹனுமான்
ஜெய ஜெய வாயு சுதா ஹனுமந்தா
ஜெய ஜெய ராம பதாம்புஜவாஸாஜெய சிரஞ்சீவி
ஜெயமே அருள்வாய்
ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமி திருவடிகளே சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்லல்

## எமது குடும்பத் தலைவி

### அமரர். திருமதி. கலாநிதி வரதகுமார்

அவர்களின் பிரிவுதனை அறிந்து ஓடோடி வந்து தோள்கொடுத்து உதவிய அயலவர்க்கும் ஆசிரியர்க்கும் அவரை கண்டி மருத்துவமனைவரை கொண்டு சென்று திரும்பிய திருமதி. மனோகரி அவர்கட்கும் இறப்பின் பின் இறுதிக் கிரியைவரை எம்முடன் வீட்டில் ஒன்றாய் நின்றுதவிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் திருக்கோணமலை வைத்தியசாலை வைத்தியர்கள் தாதி உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் ஆசிரிய பெருமக்கள் ஈமைக் கிரியையில் கலந்து கொண்ட உறவினர், நண்பர்கள், தொலைபேசிமூலம் துயரத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் எனக்காக எல்லா காரியங்களை முன்னின்று செய்த கைலாசபிள்ளை மாஸ்டர், பாஸ்கரன் அண்ணாவுக்கும் தம்பி சதா அவர்கட்கும் இன்று அந்தியேட்டிக் கிரியையில் கலந்து ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்த அனைவருக்கும் எனது தாழ்மையான நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. ஞா. வரதகுமார்
கணவர்

210/4, லோவர் றோட்,
உவர்மலை, திருகோணமலை
0770795450

• தொகுப்பாசிரியர் : சுந்தா (0756901316)
• அச்சு : ரெயின்போ கிரபிக்ஸ், திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ndation.
.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org